| | |
|---|---|
| மையம் : ________________ | பெயர்: ________________ |
| | பதிவு எண்: ________________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ________________ | நாள் : ________________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு ஜனவரி–பிப்ரவரி 2024**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
*Read the following text and answer the questions given below in a single line. **(5x1=5)***

மாலைச் சூரியன் மலைவாயிலில் மறைகிறான். இருள் கவிகிறது. விலங்குகளும் பறவைகளும் இருள் மூடிவிட்டால் ஓய்ந்து ஒடுங்கி விடும். மனிதன் முயற்சியின் ஒட்டு மொத்த உருவமாகத் திகழ்பவன் அவன் இருளை வெல்வான். இருள் வந்து மூடிவிட்டால் மனிதனின் இயக்கம் நின்று போவதில்லை. தன் மதியைக் கொண்டு நெருப்பை உருவாக்கக் கற்று கொண்ட மனிதன் விளக்கு ஏற்றி ஒளியையும் உருவாக்ககக் கற்றுக்கொண்டான். மாலை நேரத்தில் மங்கையர்கள் நீராடினார்கள். கூந்தலைச் சீவிமுடித்து மலர் சூடிக் கொண்டார்கள். நெற்றியில் திலகம் அணிந்தார்கள்.

**வினாக்கள்:–**

1. சூரியன் எங்கு மறைகிறான்?

______________________________________________

2. எப்போது இருள் சூழ்கிறது?

______________________________________________

3. இருள் கவியும்போது எதன் இயக்கம் நிற்பதில்லை?

______________________________________________

4. நெருப்பை மனிதன் எதன் மூலம் உருவாக்கக் கற்றான்?

______________________________________________

5. மங்கையர் கூந்தலில் எதனைச் சூடினார்கள்?

______________________________________________

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following poem and answer the question give below in a single line.* ***(5x1=5)***

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!
என்றென்றும் வாழிய வே!

**வினாக்கள்**

1. வானமளந்தது – பிரித்து எழுதுக?

2. ஏழ்கடல் வைப்பினும் என்பது எதைக் குறிக்கும்?

3. என்றென்றும் என்பதை எவ்வாறு பிரிக்கலாம்?

4. இசைக்கொண்டு என்பதன் பொருள் யாது?

5. இப்பாடலின் ஆசிரியர் யார்?

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க:–**

*Write meaningful sentences with the following words.* ***(5x2=10)***

1. இறைவன்

2. காற்று

3. நெல்லிக்கனி

4. குற்றாலம்

5. பாம்பு

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

*Answer any Five of the following questions in a few lines.* ***(5x4=20)***

1. எதிர்கால இந்தியாவை ஆளப்போகிறவர்கள் யார்?
2. மாணவர்கள் ஏன் அரசியலில் வர வேண்டும்?
3. முக்கூடற்பள்ளு நூல் குறிப்பு வரைக.

4. திணை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
5. நாட்டுப்புறப் பாடல்கள் குறித்து எழுதுக.
6. வருணனை என்றால் என்ன. விளக்குக.

**பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**

*Write a letter on any one of the given subjects. (1x10=10)*

1. பிறந்தநாள் பரிசு தந்த மாமாவுக்கு நன்றி கூறி கடிதம் எழுதுக.
2. புத்தகம் தந்த ஆசிரியருக்கு நன்றி கூறி கடிதம் எழுதுக.

3. ஊரில் உள்ள உன் தங்கைக்கு நலம் விசாரித்து கடிதம் எழுதுக.

******